(2) வினாக்கள்–விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்

Tamil Archana

@ * 72 Q.—THIRU P. THIRUGNANASAMBANDAM: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether Tamil Archana was commenced in the Temple at Mint, Madras on 11th August 1971; and

(b) if so, whether any picketing was held at the inauguration function as a measure of protest against the performance of Archanas in Tamil on that day?

தமிழ் அர்ச்சனை

திரு. பி. திருஞானசம்பந்தம்: மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை தங்கசாலை தெருவில் உள்ள ஆலயத்தில் 11—8—1971 அன்று தமிழ் அர்ச்சனை துவக்கப்பட்டதா?

(இ) ஆமெனில், அத்தமிழ் அர்ச்சனை துவக்க விழாவில் தமிழில் அர்ச்சனை செய்வதை எதிர்த்து மறியல் நடத்தப்பட்டதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) சென்னை-1, தங்கசாலை, ஏகாம்பரேஸ்வரர் கோவிலில், அறநிலைய அமைச்சரால் தமிழ் அர்ச்சனை 12—8—1971-ல் தொடங்கி வைக்கப்பட்டது. 11—8—1971-ல் அல்ல.

(இ) சென்னை கோவில் அர்ச்சனை பாதுகாப்புச் சங்கத்தைச் சேர்ந்த 9 பேர், கோவில்களில் தமிழ் அர்ச்சனை செயலுக்குக் கொண்டு வரப்பட்டதை எதிர்த்து கோவிலுக்கு முன் அன்று ஆர்ப்பாட்டம் செய்தனர். மறியல் செய்தவர்கள் கைது செய்யப்பட்டு அவர்கள் மீது வழக்குத் தொடரப்பட்டு, குற்றவாளிகள் என்று சென்னை மாநகர நான்காவது மாஜிஸ்ரேட்டினால் தீர்ப்பளிக்கப்பட்டு, தலைக்கு ரூ. 15 அபராத தண்டனை விதிக்கப்பட்டனர். குற்றவாளிகள் அபராதத் தொகையை செலுத்தினர்.

Econmy Measures

@ * 73 Q.—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether the Union Government have sent any suggestions for economy measures to be taken by the State Government; and

(b) if so, the steps taken in this regard?

@ 19—8—1972 வினாப்பட்டியலிலிருந்து ஒத்திப்போடப்பட்டது.

1972 ஆகஸ்ட் 23]

சிக்கன நடவடிக்கைகள்

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மாநில அரசு மேற்கொள்ள வேண்டிய சிக்கன நடவடிக்கைகள் குறித்து ஏதாவது கருத்துரைகளை மத்திய அரசு தெரிவித்துள்ளதா?

(இ) ஆமெனில், இது குறித்து மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) ஆம்.

(இ) இவ்வரசு மேற்கொண்ட சிக்கன நடவடிக்கைகளைக் காட்டும் விவர அறிக்கை @ ஒன்று பேரவை முன் வைக்கப்படுகிறது.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, பல்வேறு சிக்கன நடவடிக்கைகளை அரசு கையாள வேண்டுமென்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அதன் அடிப்படையில் என்னென்ன காரியங்கள் நிறுத்தி வைக்கப்பட்டன, சிக்கனம் ஏற்பட்டதா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, சிக்கனம் ஏற்பட்டது. செலவு குறைக்கப்பட்டது. அதனால் கொஞ்சம் பணம் மிச்சப்பட்டது.

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் : தலைவரவர்களே, சாதாரணமாக மாநிலத்தின் வருவாயில் பத்தில் ஒரு பங்கு செலவழிக்காத ஒரு நடைமுறை இருந்து வந்திருக்கிறது. ஒரு வழக்கத்தின்படி அது இருக்கிறது. அந்த அளவுக்குத் தான் அது செலவழிக்கப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, திட்டங்களைப் பொறுத்த வரையில், சிக்கன நடவடிக்கை அல்ல. விழாக்கள் போன்றவற்றில் சிக்கனத்தை அமைத்துக்கொள்வது சம்பந்தமாக, திட்டங்களல்லாத மற்றவற்றை ஒதுக்கி வைக்க வேண்டும், ஒத்தி வைக்க வேண்டுமென்று மத்திய அரசு கருத்து அனுப்பியிருக்கிறது. அது மேற்கொள்ளப்பட்டது.

@ 102–103-ஆம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[1972 ஆகஸ்ட் 23

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, அரசுக்கு வர வேண்டிய பணத்தை அதிக நாள் விட்டு வைக்காமல் உடனடியாக வசூல் செய்யக் கூடிய முறை தெரிவிக்கப்பட்டதா? அது கையாளப் பட்டதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, சொல்லாமலேயே அரசு அந்தக் காரியங்களில் ஈடுபட்டுக்கொண்டிருப்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : சிக்கன நடவடிக்கையின் காரணமாக பணம் மிச்சப்பட்டது என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். உத்தேசமாக எவ்வளவு தொகை மிச்சப் பட்டிருக்கும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, மத்திய அரசிடம் நாம் பணம் கேட்டுக்கொண்டிருக்கிறோம். இந்த ரகசியங்களையெல்லாம் வெளியிடுவது நல்லதல்ல.

Teachers standing for Election to the State Legislative **Council.**

@ * 74 Q.—THIRU A. R. DAMODARAN (on behalf of THIRU D. SANTOSHAM) : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether teachers employed in Government Schools are prohibited from standing for election to the Legislative Council from the Teachers' Constituencies ;

(b) if so, the reasons therefor; and

(c) whether there is any proposal to relax this rule?

ஆசிரியர்கள் தமிழ்நாட்டு சட்ட மன்ற தேர்தலுக்கு போட்டியிடுதல்

திரு. ஏ. ஆர். தாமோதரன் (திரு. டி. சந்தோஷம் சார்பில்) : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அரசுப் பள்ளிகளில் வேலை பார்க்கும் ஆசிரியர்கள், ஆசிரியர்கள் தொகுதிகளிலிருந்து தமிழ்நாடு சட்ட மன்ற மேலவைத் தேர்தலுக்குப் போட்டியிடுவதினின்றும் தடைப்படுத்தப் பட்டுள்ளனரா?

@ ......வினாப்பட்டியலிலிருந்து ஒத்திப்போடப்பட்டது.